# இயல் 4

## 4.3. கல்விக்கண் திறந்தவர்

I.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் ________.

அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை

ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை

இ) வழி தெரியவில்லை

ஈ) பேருந்து வசதியில்லை

விடை : ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை

2. "பசியின்றி" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ______

அ) பசி + இன்றி

ஆ) பசி+யின்றி

இ) பசு + இன்றி

ஈ) பசு + யின்றி

விடை : அ) பசி + இன்றி

3. "காடு+ஆறு" என்னும் சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_______

அ) காட்டாறு

ஆ) காடாறு

இ) காட்டுஆறு

ஈ) காடுஆறு

விடை : அ) காட்டாறு

4. "படிப்பறிவு" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _______.

அ) படி + அறிவு

ஆ) படிப்பு + அறிவு

இ) படி + அறிவு

ஈ) படிப்பு + வறிவு

விடை :ஆ) படிப்பு + அறிவு

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்கச் _____________ அறிமுகப்படுத்தினார்

விடை : சீருடைத் திட்டத்தை

2. காமராசரை 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் __________________

விடை : தந்தை பெரியார்

## III. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. வகுப்பு

விடை : அருண் பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றான்

2. உயர்கல்வி

விடை : உயர்கல்வி பயில ராமு சென்னைக்கு சென்றான்.

3. சீருடை

விடை : பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றி பயில பள்ளிக்கு சீருடையில் தான் வரவேண்டும்.

## IV. குறுவினா.

1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?

விடை :

பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் போன்றவை காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் ஆகும்.

2. காமராசரின் சிறப்பு பெயர்கள் யாவை?

விடை:

1. படிக்காதமேதை
2. பெருந்தலைவர்
3. கர்மவீரர்
4. கருப்புக்காந்தி
5. ஏழைப்பங்காளர்
6. தலைவர்களை உருவாக்குபவர்

## V. சிறுவினா.

1. காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.

விடை:

- ❖ காமராசர் முதல் அமைச்சராக பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய 6000 தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.
- ❖ மாநிலம் முழுக்க அனைவருக்கும் இலவசக் கட்டாயக்கல்விக்கான சட்டத்தை இயற்றி தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றி படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- ❖ பள்ளிகளில் குழந்தைகள் ஏற்றத்தாழ்வின்றி கல்விக் கற்பதற்காக சீருடைத் திட்டத்தினைக் கொண்டு வந்தார்.
- ❖ பள்ளிகளின் வசதியைப் பெருக்க பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார். தமிழ்நாட்டில் பல கிளை நூலகங்களைத் தொடங்கினார்.
- ❖ மாணவர்கள் உயர்கல்விப் பெறப் பொறியில் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை புதிதாக தொடங்கினார்.

இவ்வாறு கல்விப் புரட்சிக்கு வித்திட்டார். இவையெல்லாம் காமராஜர் ஆற்றிய கல்விப்பணிகள் ஆகும்.

2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

விடை:

- ❖ காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை திறக்க ஆணையிட்டார்.

- மாநிலம் முழுக்க அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுனறைபடுத்தினார்.
- மாணவர்கள் பசியின்றிப் படிக்க மத்திய உணவுத்திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.